# தி லக்ஷ்மி மில்ஸ் கம்பெனி லிமிடெட்

CIN : L17111TZ1910PLC000093
பதிவு அலுவலகம் : 686, அவனாசி சாலை, கோயமுத்தூர் - 641 037.
ESTD-1910 Ph : 0422-2245461 E-mail : contact@lakshmimills.com www.lakshmimills.com

## 111-வது வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு

அன்பார்ந்த உறுப்பினர்களே,

நிறுவனங்கள் சட்டம், 2013 மற்றும் அதனுடன் வடிவமைக்கப்பட்ட விதிகள் மற்றும் இந்திய பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியம் (செபி)(பட்டியலிடும் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015, 08.04.2020, 15.06.2020, 28.09.2020, 31.12.2020 மற்றும் 13.01.2021 தேதியிட்ட செபியின் சுற்றறிக்கைகள் மற்றும் கம்பெனிகள் விவகாரங்கள் அமைச்சகத்தின் 12.05.2020 மற்றும் 15.01.2021 தேதியிட்ட சுற்றறிக்கைகளின்படி (MCA சுற்றறிக்கைகள்) பொதுவான இடத்தில் உறுப்பினர்களின் நேரடி பங்கேற்பு இல்லாமல், நமது நிறுவனத்தின் 111-வது வருடாந்திர பொதுக்கூட்டம் (AGM) 2021 செப்டம்பர் 24-ஆம் தேதி வெள்ளிக்கிழமை மதியம் 12.05 மணிக்கு காணொளி வசதி (VC) / பிற ஒலியுணர் காட்சி வழிமுறை (OAVM) வசதி மூலம் பொருந்தக்கூடிய விதிமுறைகளுக்கு இணங்க நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

111-வது பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் 2021-ம் ஆண்டிற்கான வருடாந்திர அறிக்கை 2021 மார்ச் 31-ம் தேதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகள் (வருடாந்திர அறிக்கை) மின்னஞ்சல் முகவரியை நிறுவனம் மற்றும் டெபாசிட்டரியிடம் பதிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்கள் அனைவருக்கும் மின்னஞ்சல் மூலம் மட்டுமே அனுப்பப்படும். MCA சுற்றறிக்கைகள் மற்றும் செபி சுற்றறிக்கைக்கு இணங்க உறுப்பினர்கள் VC / OAVM வசதி மூலம் மட்டுமே AGM-ல் பங்கேற்க முடியும். AGM-ல் சேருவதற்கான வழிமுறைகள் மற்றும் AGM-ன் போது தொலை - மின் - வாக்களிப்பு மூலம் வாக்களிக்கும் முறை ஆகியவற்றில் பங்கேற்பது குறித்து AGM அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளது. நிறுவனங்கள் சட்டம், 2013-இன் பிரிவு 103இன் கீழ் கூட்டம் நடத்துவதற்கான குறை நிறைவெண் (Quorum) கணக்கிடும் நோக்கத்திற்காக வி.சி. / ஓ.ஏ.வி.எம் வசதி மூலம் பங்கேற்கும் உறுப்பினர்கள் கணக்கிடப்படுவார்கள். AGM அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை நிறுவனத்தின் வலைய தளம் www.lakshmimills.com மற்றும் பங்குச்சந்தை - பிஎஸ்இ லிமிடெட்டின் வலைய தளம் www.bseindia.com ஆகியவற்றிலும் காணலாம்.

நிறுவனம் / டெபாசிட்டரியுடன் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யாத பத்திர வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், AGM வருடாந்திர அறிக்கை மற்றும் உள்நுழைவு விவரங்களை AGM-ல் சேருவதற்கான வி.சி. / ஓ.ஏ.வி.எம் வசதி மூலம் மின்னணு வாக்களிப்பு உள்ளிட்ட தகவல்களைப் பெற info@skdc-consultants.com-க்கு மின்னஞ்சல் மூலம் பின்வரும் ஆவணங்களின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல் சமர்ப்பிக்க வேண்டும்.

a. பெயர், உறுப்பினர் எண் மற்றும் முழுமையான முகவரியைக் குறிப்பிடும் கையொப்பமிடப்பட்ட கோரிக்கைக் கடிதம்;
b. வருமான வரி கணக்கு எண் அட்டையின் சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல்; மற்றும்
c. நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் முகவரிக்கு ஆதரவாக எந்தவொரு ஆவணத்தின் (ஆதார் அட்டை / ஓட்டுநர் உரிமம் / வாக்காளர் அடையாள அட்டை / பாஸ்போர்ட்) சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல்.

மின்னணு தீர்வை சேவை அல்லது வேறு எந்த வழிகளில் (எலக்ட்ரானிக் வங்கி ஆணை) தங்கள் வங்கிக் கணக்குகளில் நேரடியாக ஈவுத்தொகையைப் பெறுவதற்கான ஆணையைப் புதுப்பிக்காத பத்திர வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், பின்வரும் விவரங்களை ஆவணங்களை அனுப்பி தங்கள் வங்கி ஆணையை பதிவு செய்யலாம். மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுக்கு கூடுதலாக info@skdc-consultants.com -க்கு மின்னஞ்சல் மூலம் சமர்ப்பிக்கவும்.

a. ஈவுத்தொகை பெற வேண்டிய வங்கியின் பெயர் மற்றும் கிளை மற்றும் வங்கி கணக்கின் வகை :
b. மைய வங்கியியல் முறை அமல்படுத்திய பின்னர் வங்கியால் ஒதுக்கப்பட்ட வங்கி கணக்கு எண்;
c. 11 இலக்க IFSC குறியீட்டு எண்; மற்றும்
d. பங்குகளை கூட்டாக வைத்திருந்தால், முதல் உறுப்பினரின் பெயர் அச்சிட்ட ரத்து செய்யப்பட்ட காசோலையின் சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல்.

மின்னணு வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரி / மின்னணு வங்கி ஆணையை டெபாசிட்டரியுடன் புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு மாற்று புத்தகம் 18.09.2021 சனிக்கிழமை முதல் 24.09.2021 வெள்ளிக்கிழமை வரை (இரண்டு நாட்களும் உட்பட) AGM-ன் நோக்கத்திற்காக மூடப்பட்டிருக்கும். **நிறுவனத்தின் இயக்குநர்கள் குழு 31.03.2021 உடன் முடிவடைந்த நிதியாண்டிற்கு ரூ. 100/- மதிப்புள்ள பங்கு ஒன்றுக்கு ஈவுத்தொகையாக ரூ. 15/- பரிந்துரைத்துள்ளது.** எனவே, ஈவுத்தொகை செலுத்துவது தொடர்பான நிதிச் சட்டம் 2020-ன் விதிகள் இந்த ஆண்டுக்கு கடைபிடிக்கப்படும்.

வருமான வரிச் சட்டம், 1961 ("சட்டம்")ன் விதிகள் மற்றும் நிதிச் சட்டம், 2020-ன் விதிமுறைகளுடன், ஏப்ரல் 1, 2020 முதல் நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டு செலுத்தப்படும் ஈவுத்தொகைக்கு அதன் பங்குதாரர்களின் கைகளில் வரி விதிக்கப்படும். அதற்கேற்ப நிறுவனம் பொருந்தும் சதவிகிதத்தில் (டிடிஎஸ்) வரியை கழிக்க வேண்டும். மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, 2021-22 நிதியாண்டில் ஈவுத்தொகை செலுத்தும் போது, பொருந்தக்கூடிய விதிமுறைகள் மற்றும் டிடிஎஸ் விகிதங்களின்படி நிறுவனம் வரி பிடித்தம் செய்யும்.

எவ்வாறாயினும், எந்தவொரு நிதியாண்டிலும் அவர்கள் பெறும் மொத்த ஈவுத்தொகை ரூ. 5,000/- ஐ விட அதிகமாக இல்லாவிட்டால், ஒரு பங்குதாரருக்கு செலுத்த வேண்டிய ஈவுத்தொகையில் எந்த வரியும் கழிக்கப்படாது.

1. வருமான வரி நிரந்தர கணக்கு எண் உள்ளவர்கள் மற்றும் உள்நாட்டு பங்குதாரர்களுக்கு டிடிஎஸ் 10% கழிக்கப்படும்.
2. (அ) நிரந்தர கணக்கு எண் வழங்காத அல்லது தவறான எண் வழங்கிய அல்லது
   (ஆ) முந்தைய இரண்டு நிதியாண்டுகளுக்கான வருமான வரி கணக்குகளை வருமான வரித்துறையில் தாக்கல் செய்யாத மற்றும் எந்த ஒரு நிதியாண்டிலும் வரி பிடித்தல் / சேகரிப்புக்கு உட்பட்டு ரூ. 50,000/- அல்லது அதற்கு மேல் உள்ளவர்களுக்கு

டிடிஎஸ் 20% கழிக்கப்படும். அதாவது, உள்நாட்டு பங்குதாரர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய ஈவுத்தொகையின் தொகைக்கு இரண்டு மடங்கு பொருந்தும் விகிதத்தில்.

எனவே, பங்குகளை மின் வடிவத்தில் வைத்திருக்கும் பங்குதாரர்கள் தங்கள் வருமான வரி நிரந்தர கணக்கு எண்ணை டெபாசிட்டரி பங்கேற்பாளரிடம், மற்றும் பங்குகளை பத்திர வடிவத்தில் வைத்திருக்கும் பங்குதாரர்கள் தங்கள் வருமான வரி நிரந்தர கணக்கு எண்ணை நிறுவனத்தின் பதிவாளர்கள் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரிடம், புதுப்பிக்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மேற்கண்ட தகவல்கள் நிறுவனத்தின் அனைத்து உறுப்பினர்களின் தகவல் மற்றும் நன்மைக்காக வழங்கப்படுகின்றன. மேலும் இது MCA சுற்றறிக்கைகள் மற்றும் செபி சுற்றறிக்கைக்கு இணங்க உள்ளது.

தி லக்ஷ்மி மில்ஸ் கம்பெனி லிமிடெட்டுக்காக,
நா. சிங்காரவேல்
கம்பெனி செயலாளர்

கோயமுத்தூர்
26.08.2021

# THE LAKSHMI MILLS COMPANY LIMITED

CIN : L17111TZ1910PLC000093
Regd. Office : 686, Avanashi Road, Coimbatore - 641 037
ESTD-1910 Ph : 0422-2245461 E-mail : contact@lakshmimills.com
www.lakshmimills.com

## NOTICE TO THE MEMBERS OF 111TM ANNUAL GENERAL MEETING

1. Notice is hereby given that the 111th Annual General meeting of the Company (AGM) will be held on Friday, 24th September 2021 at 12.05 P.M through Video Conference (VC) / Other Audio Visual Means (OAVM) facility in compliance with the applicable provisions of the Companies Act, 2013 and Rules framed thereunder and the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 read with Circulars dated 8th April 2020, 13th April 2020, 15th June 2020, 28th September 2020, 31st December 2020 and 13th January 2021 respectively, issued by the Ministry of Corporate Affairs (MCA Circulars) and Circulars dated 12th May 2020 and 15th January 2021 issued by the Securities and Exchange Board of India (SEBI Circulars), without the physical presence of the Members at the common venue.
2. The Notice of the 111th AGM and the Annual Report for the year 2021 including the financial statements for the year ended 31st March 2021 (Annual Report) will be sent only by email to all those Members, whose email addresses are registered with the Company or with their respective Depository Participants (DP), in accordance with the MCA Circulars and the SEBI Circular. Members can join and participate in the AGM through VC / OAVM facility only. The instructions for joining the AGM and the manner of participation in the remote e-voting or casting vote through the e-voting system during the AGM are provided in the Notice of the AGM. Members participating through VC / OAVM facility shall be counted for the purpose of reckoning the quorum under Section 103 of the Companies Act, 2013. The Notice of the AGM and the Annual Report will also be available on the website of the Company i.e., www.lakshmimills.com and the website of the Stock Exchange – BSE Ltd – i.e., www.bseindia.com.
3. Members holding shares in physical form who have not registered their email addresses with the Company / DP can obtain Notice of the AGM, Annual Report and / or login details for joining the AGM through VC / OAVM facility including e-voting, by sending scanned copy of the following documents by email to info@skdc-consultants.com.
   a. a signed request letter mentioning the name, folio number and complete address;
   b. self attested scanned copy of the PAN Card; and
   c. self attested scanned copy of any one document (AADHAR Card / Driving Licence / Voter ID Card / Passport) in support of the address of the Members as registered with the Company.
4. Members holding shares in physical form who have not updated their mandate for receiving the dividends directly in their bank accounts through Electronic Clearing Service or any other means (Electronic Bank Mandate), can register their Bank Mandate by sending the following details / documents in addition to the documents mentioned in para 3 above by email to info@skdc-consultants.com:
   a. Name and Branch of the Bank in which the dividend is to be received and the type of the Bank Account;
   b. Bank Account Number allotted by the Bank after implementation of Core Banking Solutions;
   c. 11 digit IFSC Code; and
   d. Self attested scanned copy of the cancelled cheque bearing the name of the Member as the First holder, in case shares are held jointly.
5. Members holding shares in demat form are requested to update their email address / Electronic Bank Mandate with the DP.
6. The Annual Book Closure is from 18.09.2021 - Saturday to 24.09.2021 – Friday (both days inclusive) for the purpose of the AGM. The Board of Directors of the Company has recommended a dividend of Rs. 15/- per Equity Share of Rs. 100/- each for the year ended 31.03.2021. Hence, the provisions of Finance Act, 2020 with regard to payment of dividend arise for the year.

   In accordance with the provisions of the Income Tax Act, 1961 ('Act') as amended by and read with the provisions of the Finance Act, 2020, applicable with effect from April 1, 2020, dividend declared and paid by the Company is taxable in the hands of its shareholders, and accordingly the Company is required to deduct tax at source (TDS) at the applicable rates. In view of the above, the Company would be deducting tax as per applicable provisions and TDS rates, while paying dividend in the Financial Year 2021-22.

However, no tax shall be deducted on the Dividend payable to a resident Individual if the total dividend to be received by them during any Financial Year (FY) does not exceed Rs. 5,000.

1. TDS will be deducted @ 10% for those resident shareholders with valid Permanent Account Number (PAN) and
2. TDS will be deducted @ 20% i.e., at twice the applicable rate on the amount of dividend payable for the resident shareholders, who
   (a) have not furnished PAN or furnished invalid PAN; or
   (b) have not filed with the Income Tax Department their return of income for the previous two financial years and were subject to tax deduction / collection at source aggregating Rs. 50,000/- or more in each of those financial years.

Hence, the shareholders are advised to update their PAN with the Depository Participant, if shares are held in Demat form, and with the Registrar and Share Transfer Agents of the Company, if shares are held in Physical form.

The above information is being issued for the information and benefit of all the Members of the Company and is in compliance with the MCA Circulars and the SEBI Circular.

For THE LAKSHMI MILLS CO. LTD.
(S/d) **N.SINGARAVEL**
Company Secretary

Coimbatore
26.08.2021

# THE LAKSHMI MILLS COMPANY LIMITED

CIN : L17111TZ1910PLC000093 | www.lakshmimills.com
Regd. Office : 686, Avanashi Road, Coimbatore - 641 037

## NOTICE OF THE 111TH ANNUAL GENERAL MEETING AND E-VOTING INFORMATION

Dear Members,

Notice is hereby given that the 111th Annual General Meeting (AGM) of the Company will be held at 12.05 P.M IST, on Friday, the 24th Day of September, 2021 through Video Conference (VC) / Other Audio Visual Means (OAVM) to transact the business, as set out in the Notice of AGM dated 28th June, 2021.

The Company has sent the Notice of AGM / Annual Report to those shareholders' holding shares of the Company on 1st September, 2021, through e-mail to Members whose e-mail addresses are registered with the Company / Depositories in accordance with the Circulars issued by the Ministry of Corporate Affairs (MCA) and Securities and Exchange Board of India ("SEBI").

The AGM Notice along with the explanatory statement and the Annual Report for the financial year 2020-21 is available and can be downloaded from the Company's website www.lakshmimills.com and the website of Stock Exchange in which the shares of the Company are listed i.e., BSE Limited - www.bseindia.com and on the website of National Securities Depository Limited (NSDL) - www.evoting.nsdl.com.

Members can attend and participate in the AGM through VC / OAVM facility only. The instructions for joining the AGM are provided in the Notice of the AGM. Members attending the meeting through VC / OAVM shall be counted for the purposes of reckoning the quorum under Section 103 of The Companies Act, 2013.

In compliance with Section 108 of the Companies Act, 2013 read with Rule 20 of The Companies (Management and Administration) Rules, 2014 as amended from time to time and Regulation 44 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, the Members are provided with the facility to cast their votes on all resolutions as set forth in the Notice of the AGM using remote electronic voting system (remote e-voting) provided by NSDL. Additionally, the Company is also providing the facility of voting through e-voting system during the AGM ("e-voting"). Detailed procedure for remote e-voting / e-voting is provided in the Notice of the AGM. For further details in connection with e-voting, Members may also visit the website - www.evoting.nsdl.com.

The Board of Directors of the Company has appointed Sri B. Krishnamoorthi, Chartered Accountant in Practice as Scrutinizer to scrutinize the voting process in a fair and transparent manner.

Members are requested to carefully read the instructions given for voting through e-voting in the AGM Notice. Members are also requested to note the following:

| | | |
|---|---|---|
| 1. | Date of completion of dispatch of Notice / Annual Report | Wednesday, 1st September 2021 |
| 2. | Date and time of commencement of remote e-voting | Tuesday, 21st September 2021 (9.00 AM IST) |
| 3. | Date and time of conclusion of remote e-voting. Remote e-voting will not be allowed beyond this date and time. | Thursday, 23rd September 2021 (5.00 PM IST) |
| 4. | Cut-off date for determining the Members eligibility for e-voting / remote e-voting | Friday, 17th September 2021 |

Those Members, who are present in the AGM through VC / OAVM facility and had not cast their votes on the resolution through remote e-voting and are otherwise not barred from doing so, shall be eligible to vote through e-voting system during the AGM.

A person whose name is recorded in the Register of Members or in the Register of Beneficial Owners maintained by the Depositories as on the cut-off date only shall be entitled to avail the facility of remote e-voting or voting at the AGM. The voting rights of Members shall be in proportion to the shares held by them in the paid up equity share capital of the Company as on the cut-off date.

Any person, who acquires shares of the Company and becomes a Member of the Company after the Notice has been sent electronically by the Company, and holds shares as on the cut-off date, may obtain the login id and password by sending a request to evoting@nsdl.co.in. However, if he / she have already registered with NSDL for remote e-voting then he / she can use his / her existing User ID and Password for casting the votes.

In case the Member's email ID is already registered with the Company / its Registrar & Share Transfer Agent ("RTA") / Depositories, login details for e-voting are being sent on the registered email address.

If you have not registered your e-mail address with the Company / RTA / Depository, you may please follow the below mentioned instructions for obtaining login details fore-voting:

1. Members holding shares in physical mode are requested to send a request to the Registrar & Share Transfer Agent of the Company, M/s. S.K.D.C. Consultants Limited ("SKDC") at info@skdc-consultants.com by providing Folio No., name of shareholder, scanned copy of the share certificate (front and back), PAN (self-attested), Aadhar (Self-attested) for registering the e-mail address.
2. Members holding shares in Demat mode are requested to contact their Depository Participant ("DP") and register their e-mail address in their Demat account, as per the process advised by the DP.

For details relating to remote e-voting, please refer to the Notice of the AGM. If you have any queries relating to remote e-voting, please refer to the Frequently Asked Questions (FAQs) and e-voting user manual for shareholders available at the Downloads section of www.evoting.nsdl.com or contact toll free No.1800-222-990 or send a request to evoting@nsdl.co.in.

The result of e-voting will be announced by the Company in its website www.lakshmimills.com and on the website of National Securities Depository Limited (NSDL) and also will be intimated to the stock exchange - BSE Ltd., in which the equity shares of the Company are listed.

This public notice is also available in the Company's website viz. www.lakshmimills.com and on the website of the stock exchange - BSE Ltd., in which the equity shares of the Company are listed.

Notice is hereby given that the Register of Members and Share Transfer Books of the Company will remain closed from Saturday, 18th September, 2021 to Friday, 24th September, 2021 (Both days inclusive) for the purpose of AGM.

For THE LAKSHMI MILLS CO. LTD.
N.SINGARAVEL
Company Secretary

Coimbatore
02.09.2021

# தி லக்ஷ்மி மில்ஸ் கம்பெனி லிமிடெட்

CIN : L17111TZ1910PLC000093 | www.lakshmimills.com
பதிவு அலுவலகம் : 686, அவனாசி சாலை, கோயமுத்தூர் - 641 037.

## 111-வது வருடாந்திர பொதுக் கூட்டம் மற்றும் மின்னணு வாக்களிப்பு தகவலின் அறிவிப்பு

அன்பார்ந்த உறுப்பினர்களே,

நிறுவனத்தின் 111-வது வருடாந்திர பொதுக்கூட்டம் (AGM) வரும் 2021-ம் வருடம் செப்டம்பர் மாதம் 24-ம் தேதி வெள்ளிக்கிழமை அன்று இந்திய நேரம் மதியம் 12.05 மணியளவில் ஒளித்தோற்ற மாநாடு (Video Conferencing / VC) பிற ஒலியுணர் காட்சி வழி முறைகள் (Other Audio Visual Means / OAVM) எனும் நுட்ப பயன்பாட்டின் வாயிலாக, 2021-ம் வருடம் ஜுன் மாதம் 28-ம் தேதியிட்ட வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் (AGM Notice) குறிப்பிட்டுள்ள விஷயங்கள் கூட்டத்தின் அலுவலாகக் கருதப்படும்.

நிறுவன விவகாரங்கள் அமைச்சகம் (Ministry of Corporate Affairs / MCA) வெளியிட்ட சுற்றறிக்கைகள் (MCA Circulars), மற்றும் இந்திய காப்பாவணங்கள் பரிமாற்று வாரியம் (Securities Exchange Board of India / SEBI) வெளியிட்ட சுற்றறிக்கைகளை (SEBI Circular) கருத்தில் கொண்டு இந்நிறுவனம் ஆண்டு அறிக்கை மற்றும் பொதுக்கூட்ட அறிவிப்பை 2021-ம் வருடம் செப்டம்பர் மாதம் 1-ம் தேதியன்று நிறுவனத்திடம் அல்லது டெப்பாசிட்டரியிடம் தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்திருக்கும் உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல் வாயிலாக அனுப்பியுள்ளது.

2020-21 நிதியாண்டிற்கான விளக்க அறிக்கை உள்ளடக்கிய வருடாந்திர அறிக்கையை இந்நிறுவனத்தின் இணையதளமான (www.lakshmimills.com) மற்றும் பங்கு வர்த்தக மையம் BSE Limited - www.bseindia.com மற்றும் நேஷனல் செக்யூரிட்டீஸ் டெப்பாசிட்டரி லிமிட்டெடின் (NSDL) இணைய தளம் www.evoting.nsdl.com ஆகியவற்றிலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். உறுப்பினர்கள் ஒளித்தோற்ற மாநாடு / பிற ஒலியுணர் காட்சி வழிமுறைகள் வசதி மூலம் மட்டுமே வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ள முடியும். அதற்கான வழிமுறைகள் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் கூட்டத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்கள், நிறுவனங்கள் சட்டம் 2013 பிரிவு 103-ன் கீழ் கூட்டத்தில் குறை நிறையெண் உறுப்பினர் எண்ணிக்கையை (Quorum) கணக்கிடும் நோக்கத்திற்காக கருதப்படுவார்கள்.

நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014-ன் 20-ம் விதியை கருத்தில் கொண்டு நிறுவனங்கள் சட்டம் 2013-ன் பிரிவு 108 (அவ்வப்போது மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் உட்பட) மேலும் இந்திய காப்பாவணங்கள் பரிமாற்று வாரியம் (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள் 2015; விதிமுறை எண் 44 ஆகியவற்றிற்கு இணங்க NSDL நிறுவனம் தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவு முறையை (தொலை மின்னணு வாக்களிப்பு) பயன்படுத்தி பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தீர்மானங்களிலும் உறுப்பினர்கள் வாக்களிக்கும் வசதி வழங்கியுள்ளது. மேலும், வருடாந்திர பொதுக்கூட்டத்தின் போது மின்னணு வாக்களிப்பு முறை மூலம் வாக்களிக்கும் வசதியையும் நிறுவனம் வழங்கியுள்ளது.

தொலைநிலை மின்னணு வாக்களிப்பு / மின்னணு வாக்களிப்புக்கான விரிவான நடைமுறைகள் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளது. மின்னணு வாக்களிப்பு தொடர்பான கூடுதல் விபரங்களுக்கு உறுப்பினர்கள் www.evoting.nsdl.com என்ற இணயை தளத்தையும் பார்வையிடலாம்.

நிறுவனத்தின் இயக்குநர்கள் குழு, பட்டய கணக்காளர் திரு. பி. கிருஷ்ண மூர்த்தி அவர்களை வாக்களிப்பு முறையை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் நடத்துவதற்காக கண்காணிப்பாளராக (Scrutiniser) நியமித்துள்ளது.

பொதுக்கூட்ட அறிவிப்பில் மின்னணு வாக்களிப்பு மூலம் வாக்களிக்க தரப்பட்டுள்ள வழிமுறைகளை உறுப்பினர்கள் கவனமாகப் படிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். உறுப்பினர்கள் பின்வருவனவற்றையும் கவனிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| | | |
|---|---|---|
| 1. | பொதுக்கூட்ட அறிவிப்பு / ஆண்டு அறிக்கை உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்ட தேதி | செப்டம்பர் 1, 2021 புதன்கிழமை |
| 2. | தொலை மின்னணு வாக்களிப்பு தொடங்கும் தேதி மற்றும் நேரம் | செப்டம்பர் 21, 2021 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி |
| 3. | தொலை மின்னணு வாக்களிப்பு முடிவடையும் தேதி மற்றும் நேரம். இந்த தேதி மற்றும் நேரத்திற்கு பிறகு தொலை மின்னணு வாக்களிப்பு அனுமதிக்கப்படாது. | செப்டம்பர் 23, 2021 வியாழக்கிழமை மாலை 5.00 மணி. |
| 4. | தொலைநிலை மின்னணு / கூட்டத்தின் போது நடைபெறவிருக்கும் மின்னணு வாக்களிப்புக்கு தகுதியான உறுப்பினர்களைத் தீர்மானிக்கும் தேதி | செப்டம்பர் 17, 2021 வெள்ளிக்கிழமை |

VC/OAVM வசதி மூலம் கூட்டத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்கள், மின்னணு வாக்களிப்பு முறை மூலம் தீர்மானத்தில் ஏற்கெனவே வாக்களிக்காமல் இருந்தும் மற்றும் வேறு காரணத்திற்காகவும் வாக்களிப்பில் இருந்து தடை செய்யப்படாமல் இருந்தால் மட்டுமே கூட்டத்தின் போது நடைபெறும் மின்னணு வாக்களிப்பு முறை மூலம் வாக்களிக்கலாம்.

வாக்களிப்பு தீர்மானிப்பு நாளன்று உறுப்பினர்கள் பதிவேட்டில் அல்லது டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் பயனீட்டாளர்கள் (Beneficial Owners) பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட நபர்களுக்கு மட்டும் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் தொலை மின்னணு வாக்களிப்பு அல்லது கூட்டத்தின் போது மின்னணு மூலம் வாக்களிக்கும் வசதியைப் பெற உரிமை உண்டு. உறுப்பினர்களின் வாக்குரிமை விகிதம் 2021-ம் வருடம் செப்டம்பர் 17-ம் தேதியன்று (cut off date) நிறுவனத்தின் ஒட்டுமொத்த செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தில் உறுப்பினர் அவரவர் வைத்திருக்கும் பங்கின் விகிதாச்சார அடிப்படையில் இருக்கும்.

மின்னணு முறையில் பொதுகூட்ட அறிவிப்பை அனுப்பிய பின்னர் நிறுவனத்தின் பங்குகளைப் பெற்று வாக்களிக்கும் உரிமம் தீர்மானிக்கப்படும் நாளன்று நிறுவனத்தின் உறுப்பினராகி பங்குகளை வைத்திருக்கும் எந்தவொரு நபரும் evoting@nsdl.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு கோரிக்கையை அனுப்புவதன் மூலம் உள்நுழைவு பெயர் மற்றும் கடவுச்சொல்லைப் பெறலாம். இருப்பினும், அத்தகைய உறுப்பினர்கள் ஏற்கனவே தொலைநிலை மின்னணு வாக்களிப்பிற்காக NSDL உடன் பதிவு செய்திருந்தால், அவர்கள் தங்களிடம் ஏற்கனவே இருக்கும் உள்நுழைவு பெயர் மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தலாம்.

நிறுவனம் / அதன் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் (RTA)/டெபாசிட்டரியிடம் (DP) பங்குதாரர்களின் மின்னஞ்சல் முகவரி ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருந்தால், மின்னணு வாக்களிப்பிற்கான விபரங்கள் பதிவு செய்யப்பட்ட பங்குதாரரின் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும்.

மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத உறுப்பினர்கள், மின்னணு வாக்களிப்பிற்கான உள் நுழைவு விபரங்களைப் பெறுவதற்கு கீழ்க்கண்ட வழி முறைகளைப் பின்பற்றவும்.

1. சான்றிதழ் வடிவில் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள் நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் S.K.D.C. கன்சல்டன்ட்ஸ் லிமிடெட்டின் மின்னஞ்சல் முகவரி info@skdc-consultants.com தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்ய உறுப்பினர் எண் (Folio No.) பங்குதாரரின் பெயர், பங்கு சான்றிதழின் முன் பக்கம் மற்றும் பின் பக்கம் ஸ்கேன் செய்யப்பட்ட நகல், சுய சான்றளிக்கப்பட்ட வருமான வரித் துறையின் நிரந்தர கணக்கு எண் அட்டையின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல் மற்றும் சுய சான்றளிக்கப்பட்ட ஆதார் அட்டையின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல், ஆகியவற்றை அனுப்ப வேண்டும்.
2. டீமேட் கணக்கு முறையில் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள் தங்களின் டெபாசிட்டரியை (DP) தொடர்பு கொள்ளவும். டெபாசிட்டரி அறிவுறுத்தும் செயல்முறையின்படி மின்னஞ்சல் முகவரியை தங்களின் டீமேட் கணக்கில் பதிவு செய்யவும்.

தொலைநிலை மின்னணு வாக்களிப்பு தொடர்பான விபரங்களுக்கு தயவு செய்து பொதுக் கூட்ட அறிவிப்பைப் பார்க்கவும். இதன் தொடர்பான ஏதேனும் சந்தேகம் / கேள்விகள் இருந்தால், www.evoting.nsdl.com என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கங்கள் (Downloads) பிரிவில் இருக்கும் பங்குதாரர்களுக்கான அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQ) மற்றும் மின்னணு வாக்களிக்கும் பயனாளர் கையேட்டைப் பார்க்கவும் அல்லது 1800-222-990 எனும் கட்டணமில்லா தொலைபேசி எண்ணைத்தொடர்பு கொள்ளவும் அல்லது evoting.nsdl.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தங்களின் கோரிக்கையை அனுப்பவும்.

இந்த பொது அறிவிப்பை நிறுவனத்தின் இணையதளத்திலும் www.lakshmimills.com மும்பை பங்குச்சந்தை இணையதளத்திலும் www.bseindia.com காணப் பெறலாம்.

வாக்களிப்பின் முடிவை நிறுவனம் தனது www.lakshmimills.com என்ற இணையதளத்தில் அறிவிக்கும். மேலும், இத்தகவல் மும்பை பங்கு சந்தைக்கும் தெரிவிக்கப்படும்.

நிறுவனத்தின் உறுப்பினர்களின் பதிவு மற்றும் பங்கு பரிமாற்ற பதிவேடுகள் 2021 செப்டம்பர் மாதம் 18-ம் தேதியிலிருந்து செப்டம்பர் மாதம் 24-ம் தேதி வரை (இரண்டு நாட்களும் உட்பட) மூடப்பட்டிருக்கும்.

தி லக்ஷ்மி மில்ஸ் கம்பெனி லிமிடெட்டுக்காக
நா. சிங்காரவேல்
கம்பெனி செயலாளர்

இடம் : கோயமுத்தூர்
நாள் : 02.09.2021